செய்தி வெளியீடு எண் : 678 நாள்: 27.04.2022

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

## <u>உலக நாட்டிய தினத்தை (International Dance Day) முன்னிட்டு ஆண்டு தோறும் ஏப்ரல் திங்கள் 29ஆம் நாளன்று நாட்டிய கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்</u>

உலக நாட்டிய தினத்தை (International Dance Day) ஏப்ரல் அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, ஆண்டுதோறும் நாட்டிய நிகழ்ச்சிகள் நிகழ்த்தும் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 29.04.2022 அன்று காலை 10.00 மணி முதல் முற்பகல் 12.00 மணி வரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியுடன் இணைந்து நாட்டியக் கலை குறித்த வினாடி-வினா மற்றும் பேச்சுப் போட்டியும், மாலை 2.00 மணி முதல் 4.00 மணி வரை ஸ்ரீ தியாக பிரம்ம கான சபாவில் (வாணி மகால்), கலைமாமணி முனைவர் திருமதி. லட்சுமி ராமசுவாமியின், ஸ்ரீ முத்ராலாயா வழங்கும் "ஓங்கு தமிழர் வாழ்வு" (புறநானூறு பாடல்களைக் கோர்த்த நாட்டிய–நாடகம்) நடைபெற உள்ளது.

இவ்விழாவில் மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்

பி.சந்திரமோகன், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. சே.ரா.காந்தி, இ.ர.பா.ப., தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு. வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்-செயலாளர்(மு.கூ.பொ.) திருமதி க. விமலா, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, பத்மபூசன் கலைமாமணி முனைவர் பத்மா சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in